செய்தி வெளியீடு எண். 53-2018 நாள்: 25.01.2018

# விழுப்புரம் மாவட்டத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தின்கீழ், ஊராட்சி ஒன்றியங்களில் காலியாகவுள்ள ஒப்பந்த அடிப்படையிலான பகுதிநேர தகவல் தொகுப்பாளர் பணியிடத்திற்கு தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

விழுப்புரம் மாவட்டத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தின்கீழ், காணை, ஒலக்கூர், மேல்மலையனூர் மற்றும் கல்வராயன்மலை ஊராட்சி ஒன்றியங்களில் காலியாகவுள்ள ஒப்பந்த அடிப்படையிலான பகுதிநேர தகவல் தொகுப்பாளர் பணியிடத்திற்கு தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

இந்த பணியிடங்கள் பகுதிநேர அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமானது. இப்பணியிடம் ஒரு வருட காலத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்படும். இப்பணியில் எவ்விதமான முன்னுரிமையோ அல்லது பணி நிரந்தரம் செய்ய கோரவோ இயலாது.

மாதாந்திர தொகுப்பூதியமாக ரூ.6000/- வழங்கப்படும். விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 29.01.2018 (திங்கட்கிழமை) முதல் 07.02.2018 (புதன்கிழமை) வரை விண்ணப்பிக்கலாம்.

இப்பணியிடத்திற்கு, கணினி அறிவியலில் இளங்களை பட்டம் (அல்லது) ஏதேனும் ஒரு இளங்கலை பட்டம் மற்றும் கணினியில் M.S.Office அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் கீழ்நிலை தட்டச்சு ஆங்கிலம் மற்றும் தமிழ் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

குறைந்தபட்சம் 18 வயது நிரம்பியிருக்க வேண்டும். பட்டியல் இனத்தவர், பட்டியல் இனத்தவர் (அருந்ததியர்கள்), பழங்குடி இனத்தவர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம் அல்லாதவர்), பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) மற்றும் அனைத்து வகுப்பைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகளுக்கு வயது வரம்பு இல்லை. ஏனையோர் (அதாவது ப.இ., ப.இ(அ), ப.வ., மி.பி.வ/சீ.ம., பி.வ. மற்றும் பி.வ.(மு) ஆகிய வகுப்பினைச் சாராவர்கள்) 30 வயதுக்குள் இருக்க வேண்டும்.

ஏனைய வகுப்பைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு மேற்குறிப்பிட்ட அதிகபட்ச வயதிலிருந்து 10 ஆண்டுகள் வரை நீட்டித்து சலுகை வழங்கப்படும். ஏனைய வகுப்பைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினருக்கு 48 வரை வயது வரம்பு உண்டு.

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள்:07.02.2018. அதன் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தகுதி உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் நேர்முக தேர்வு நடைபெறும் நாள் இடம் விவரம் கடிதம் வாயிலாக பின்னர் தெரிவிக்கப்படும்.

பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி சான்றிதழ், வயது சான்றிதழ், சாதிச் சான்றிதழ், குடும்ப அட்டை, இருப்பிடச் சான்றிதழ் ஆகியவற்றின் நகலினை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். நேர்முகத் தேர்வின் போது அசல் சான்றிதழ்கள் அளிக்கப்பட வேண்டும்.

இப்பணி நியமனம் அனைத்தும் நியாயமாகவும், நேர்மையாகவும் மற்றும் வெளிப்படையாகவும் நடைபெற உள்ளது. எனவே, எவரும் இடைத்தரகர்களிடையே அல்லது வேறு எந்த நபர்களிடமோ பணம் கொடுத்து குறுக்கு வழியில் பணி நியமனம் பெற முயற்சிக்க வேண்டாம் எனவும், ஏதேனும் புகார் வரப்பெறின் சம்மந்தப்பட்டவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.